பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
26 12 2024 **THURSDAY** 12 40 **PM**
வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பல்வேறு பிரிவுகளில் சாதனை படைத்த 17 சிறுவர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, தேசிய சிறார் விருதுகளை வழங்கினார்.

2. எந்தவொரு கடினமான தருணமாக இருந்தாலும், நாட்டு நலனை விட உயர்ந்தது எதுவுமில்லை என்பதை வீர்பால் தினம் போதிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. தேசிய ஆயுஷ் இயக்கம் மக்களுக்கு குறைந்த செலவில் தரமான மருத்துவ சிகிச்சைகள் கிடைக்கச் செய்திருப்பதாக ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் கூறியுள்ளார்

4. சுனாமி தாக்குதலின் 20ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி கடலோர மாவட்டங்களில் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.

5. அஹமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<<

குழந்தைகள் நாட்டு நலனுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்வதற்கான பாதையை நாட்டுப்பற்று உணர்த்துவதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் எனப்படும் தேசிய சிறார் விருதுகளை, 17 சிறுவர்களுக்கு வழங்கி அவர் பேசினார்.

இந்த விருது பெற்ற சிறுவர்களின் சாதனைகள், இந்தியாவை வளர்ச்சியின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

குழந்தைகளின் திறமைக்கு வாய்ப்பளித்து போற்றுவது நமது பாரம்பரியத்தின் ஒரு அங்கம் என்று கூறிய குடியரசுத்தலைவர், இதனை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

14 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த இந்த சிறார்களுக்கு கலை, கலாச்சாரம், வீரச்செயல், புதுமை கண்டுபிடிப்புகள், அறிவியல் - தொழில்நுட்பம், சமூகசேவை, விளையாட்டு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கியதற்காக விருது வழங்கப்பட்டது.

>>>>><<<<<

எந்தவொரு கடினமான தருணமாக இருந்தாலும், நாட்டு நலனை விட உயர்ந்தது எதுவுமில்லை என்பதை வீர்பால் தினம் போதிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சீக்கிய குரு கோபிந்த் சிங்கின் நான்கு மகன்களான சாகிப்சாதாக்களின் தியாகத்தை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் இந்நாள் வீர்பால் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, புதுதில்லியில் தேசிய சிறார் விருதுகளை பெற்ற சிறுவர்களுடன் கலந்துரையாடிய பிரதமர், முகலாய ஆட்சியாளர்களின் கொடுமைகளை தாங்கிக் கொண்டு சாகிப்சாதாக்கள், அந்த ஆட்சியை புறக்கணித்ததை நினைவுகூர்ந்தார்.

இந்தியாவில் உள்ள குழந்தைள் மற்றும் சிறுவர்கள் எந்த அளவிற்கு திறமை வாய்ந்தவர்கள் என்பதை விருது பெற்றவர்கள் நிரூபிப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

முன்னதாக, வீர்பால் தினத்தை ஒட்டி பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மிக இளம் வயதில் நம்பிக்கை மற்றும் கொள்கை உறுதியுடன், துணிச்சல்மிக்க செயல்களால் பல தலைமுறையினரை ஈர்த்து வரும் சாகிப்சாதாக்களின் வீரமும் தியாகமும் ஈடுஇணையற்றது என தெரிவித்துள்ளார்.

சாகிப் சாதாக்களின் உயிர்த் தியாகம், வீரத்திற்கு தலைசிறந்த உதாரணமாக திகழ்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர்களின் தாய் குஜ்ரி, தந்தை குரு கோபிந்த் சிங் ஆகியோரின் துணிச்சலையும் பிரதமர் நினைவுகூர்ந்துள்ளார்.

நாட்டில் கருணையுள்ள சமுதாயத்தை உருவாக்க இவர்கள் அனைவரும் எப்போதும் வழிகாட்டுவார்கள் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சாகிப் சாதாக்களின் அசாத்திய துணிச்சல் மற்றும் தியாகத்தை போற்றுவோம் என்று தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

பிரபல மலையாள எழுத்தாளரும், திரைப்பட இயக்குநருமான எம்.டி.வாசுதேவன் நாயர் மறைவிற்கு குடியரசுத் தலைவர் பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், அன்னாரது மறைவின் மூலம் இலக்கிய உலகிற்கு பேரிழப்பு ஏற்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

அவரது எழுத்துக்கள் இந்திய கிராமப்புற மக்களின் வாழ்க்கையை வெளிப்படுத்துவதாக இருக்கும் என்றும் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், வாசுதேவ நாயரின் படைப்புகள் இலக்கியம் மற்றும் இந்திய திரைப்பட பாரம்பரியத்தை செழுமைப்படுத்தியிருப்பதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மலையாள திரையுலகம் மற்றும் இலக்கிய உலகில் மிகவும் போற்றத்தக்கவராக திகழ்ந்தவர் வாசுதேவன் நாயர் என தெரிவித்துள்ளார்.

மனித உணர்வுகளை அவர் வெளிப்படுத்திய விதம், பல தலைமுறையினரை பக்குவப்படுத்தி தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<<

தேசிய ஆயுஷ் இயக்கம் மக்களுக்கு குறைந்த செலவில் தரமான மருத்துவ சிகிச்சைகள் கிடைக்கச் செய்திருப்பதாக ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 'அனைவருக்கும் ஆயுஷ் – தேசிய ஆயுஷ் இயக்கத்தின் மூலம் முழுமையான சுகாதார சேவை' என்ற தலைப்பிலான குறும்படங்களை வெளியிட்டு அவர் பேசினார்.

நோய் பாதிப்பால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைத்து, நாட்டில் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் ஆயுஷ் சிகிச்சையின் பங்களிப்பு இந்த திரைப்படங்கள் மூலமாக விளக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் தேசிய ஆயுஷ் இயக்கம், மக்கள் வாழ்வில் எந்த அளவிற்கு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் இந்த திரைப்படங்கள் எடுத்துக்காட்டுவதாக திரு. பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

>>>>><<<<<<

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் திரு. ஆர். நல்லகண்ணுவின் 100வது பிறந்த நாளை ஒட்டி அவருக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற பிறந்த நாள் விழாவில் பேசிய அவர், எந்தக் கருத்தையும் ஆழமாக சிந்தித்து வெளிப்படுத்தக் கூடியவர் திரு. நல்லக்கண்ணு என புகழாரம் சூட்டினார்.

இளைய தலைமுறையினருக்கு அவர் தொடர்ந்து வழிகாட்ட வேணடும் என்றும் முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இந்த விழாவில் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மதிமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டு திரு. ஆர். நல்லக்கண்ணுவுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் தோன்றியதன் நூற்றாண்டு விழாவும் இந்த நிகழ்ச்சியில் கொண்டாடப்பபட்டது.

>>>>><<<<<<

சுனாமி தாக்குதலின் 20ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி சுனாமியில் உயிரிழந்தோரின் நினைவாக மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள சுனாமி நினைவுச் சின்னத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் 45 செகண்ட்ஸ்)

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி, பூம்புகார், பழையார், திருமுல்லைவாசல், வானகிரி உள்ளிட்ட மீனவ கிராமங்களில் சுனாமி நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

கடலூர் தேவனாம்பட்டினம் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூணில் ஏராளமானோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்

கன்னியாகுமரி மாவட்டம், மேலமணக்குடியில் உள்ள சுனாமி நினைவிடத்தில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு கடற்கரையிலும் மீனவர்கள், சுனாமியில் உயிரிழந்தவர்களுக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

>>>>><<<<<<

சிரியாவில் கிளர்ச்சியாளர்களுடன் நடந்த கடும் துப்பாக்கிச் சண்டையில் பாதுகாப்புப் படை வீரர்கள் 14 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் தென்பகுதியில் நிகழ்ந்த இந்த சண்டையில், 3 கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்ததாக சிரியா நாட்டின் மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

ராணுவத்தினர் அடங்கிய பாதுகாப்புப் படையின் ரோந்து குழுவினர், கிளர்ச்சியாளர் குழுவைச் சேர்ந்த முக்கிய தலைவரை கைது செய்ததை தொடர்ந்து, இருதரப்பினருக்கும் இடையே கடும் சண்டை மூண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<<

அஹமதாபாதில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 6-1, 7-6 என்ற செட்கணக்கில் ராஜேஷ்வரன் ரேவதியை வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் ஜீல் தேசாயும், அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<<

இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், ஆஸ்திரேலியா, முதல்நாளான இன்று தனது முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் 6 விக்கெட் இழப்புக்கு 311 ரன் எடுத்துள்ளது.

மெல்போர்னில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

>>>>><<<<<<

விஜய் ஹஸாரே கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் தமிழக அணிக்கு எதிரான ஆட்டத்தில் 285 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடி வரும் உத்தரபிரதேச அணி 19 புள்ளி இரண்டு ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 85 ரன் எடுத்துள்ளது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வரும் இப்போட்டி மழை பாதிப்பு காரணமாக 47 ஓவராக குறைக்கப்பட்டது, இதில்க டாஸ் வென்ற உத்தரபிரதேச அணி பந்து வீச தீர்மானித்ததை அடுத்து, பேட் செய்த தமிழக அணி 5 விக்கெட் இழப்பிற்கு 284 ரன் எடுத்தது.

>>>>>END<<<<<<